**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>செய்தி வெளியீடு எண்:</u>** **<u>நாள்: 04.12.2023</u>**

# மிக்ஜாம் புயல் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள நுங்கம்பாக்கம், தரமணி ஐஜடி மற்றும் அண்ணா சாலை துணை மின் நிலையங்களில் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்

இன்று (04.12.2023) மிக்ஜாம் புயல் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள சென்னை நுங்கம்பாக்கம் 33/11 கி. வோ. துணை மின் நிலையம், தரமணி ஐஜடி 33/11 கி. வோ. துணை மின் நிலையம் மற்றும் அண்ணா சாலை 33/11 கி. வோ. துணை மின் நிலையங்களில் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) திரு. மா.இராமசந்திரன், இயக்குனர் (பகிர்மானம்), திரு.இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்னதாக, மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் (State Load Despatch Centre) மற்றும் சென்னை மின் பகிர்மான கட்டுப்பாட்டு மையங்களில் (Chennai Distribution Control Centre) மின் விநியோகம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டார்.

நுங்கம்பாக்கம் துணை மின் நிலைய ஆய்வுக்குப் பின்னர், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, மிக்ஜாம் புயல் கனமழையினை எதிர்கொள்ள மின்சார வாரியத்தின் சார்பாக எல்லாவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மிக்ஜாம் புயல் கன மழையின் காரணமாக, மழைநீர் தேங்கியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தற்காலிகமாக மின்சாரம் விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகர பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கக்கூடிய 400 கி.வோ மிகை உயர் மின்னழுத்த பாதையில் நேற்று இரவு ஏற்பட்ட பாதிப்பு இன்று காலை சரிசெய்யப்பட்டது. இதன் மூலம் மணலி மற்றும் புளியந்தோப்பு ஆகிய 230 கி.வோ துணை மின் நிலையங்கள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளது, அதே போல, நுங்கம்பாக்கம் மற்றும் தரமணி ஐ.ஐ.டி. வளாகம் 33/11 கி. வோ. துணை மின்நிலையங்கள் மற்றும் கோடம்பாக்கம், பாடி, பெருங்குடி, பெரும்பாக்கம் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய 110 கி.வோ. துணை மின் நியைலங்களில் தண்ணீர் சூழ்ந்து உள்ளது.

இதனால், மின் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மழை தொடர்ச்சியாக பெய்து கொண்டியிருக்கிறது, மழை நீர் தேங்கியிருக்க கூடிய பகுதிகளில், தற்போது நீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது. மழை படிப்படியாக குறையும்பட்சத்தில் சீரமைப்பு பணிகள் தொடரும். களப்பணியாளர்கள் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று சீரமைப்பு பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். கனமழை காரணமாக சில இடங்களில் மரக்கிளைகள் உடைந்து விழுந்திருப்பதால் அவைகளை அப்புறப்படுத்தும் பணிகளில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. கனமழை இன்று மாலைக்குள் குறைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கனமழை குறைந்த உடன் மின்விநியோகம் நிறுத்தப்பட்ட இடங்களில், சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து சீரான மின்விநியோகம் வழங்கப்படும். சென்னையிலுள்ள 750 பீடர்களில் (மின்னூட்ட பாதை) 200 பீடர்களில் (மின்னூட்ட பாதை) தான் மின் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள பீடர்களில் தொடர்ந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் சாலை ஓரங்களிலோ, தெருக்களிலோ மழை நீர் தேங்கி மின் சாதனங்கள் ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது மின் கம்பி அறுந்து விழுந்திருந்தாலோ உடனடியாக 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்திற்கு 94987 94987 என்ற எண்ணிலோ அல்லது மின் தடை நீக்க மையத்திற்கோ உடனடியாக தகவல் தெரிவிக்குமாறும், பொதுமக்கள் தங்கள்

வீடுகளில் மழைகாலங்களில் மின் சாதனங்களை பயன்படுத்துவதில் கவனத்துடன் செயல்படுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

பின்னர், சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு கே. கே.எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்களுடன் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார். இந்நிகழ்வின் போது கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் திரு. எஸ்.கே. பிரபாகர் இ.ஆ.ப., மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.